# திராவிடநாடு

30—12—62 | வார வெளியீடு | விலை 16 காசு


# எல்லை காக்க எழுக!

—[ மு. வீரையன் ]—

நம்மைப் பழித்திட்டான்; நாட்டைப் பழித்திட்டான்;
செம்மை யிழிந்து செருக்குற்றான்—எம்மானே!
அக்கொடிய சீனன் அலறிப் புறம்ஓட
இக்கணமே செல்வோம் எழுந்து.

சீனத்தான் நம்மைச் சிறுநரியாய் எண்ணிவிட்டான்;
ஆன வரைக்கும் அடிபணியோம்—மோன
நிலைவேண்டாம் நெஞ்சம் நிமிர்ந்திடவே நின்று
கொலைசெய்வோம் வெற்றிப்பறை கொட்டி.

புயலை எதிர்க்கின்ற புல்லாக வந்த
செயலை நினைத்துச் சிரிப்பாய்—அயல்வந்த
புன்மை ஒழித்துப் புவியில் அறிவோடு
நன்மைக் குயர்வளிப்போம் நாம்.

காதலெலாம் நாட்டின்மேல்; கண்சாடை எல்லையின்மேல்
சாதலெனில் நாட்டிற்கே செத்திடுவோம்—மோதலிலே
நல்லாரும் நன்னுடும் நாளும் நமைவிழைய
எல்லையைக் காப்போம் எழுந்து.

# பாலையில் கண்ட பாவேந்தன்!

—[மு. தமிழ்நாகன்]—

தாரணியிலே தனிப்புகழ் பெற்றது தமிழ் நாடு. முக்கனி பெற்ற நாடு; முத்தமிழ் வளர்த்த நாடு; மும்மன்னர் ஆண்ட நாடுகளில் முதன்மையாக வைத்து எண்ணப் படுவது மலைநாடு என்னும் சேரநாடு. 'சேரநாடு தந்தமுடைத்து' என்பர் தக்கோர். தந்தமுடைய யானை களைப் பெற்ற நந்தமிழ் நாட்டு மன்னர்கள், இருந்தாலும் இறந்தாலும், ஆயிரம் பொற்காசுகளை அள்ளித் தரும் வேழத்தைப் போன்று வலிவுடையவர்கள் என்பது மட்டுமன்று; கிலி பிடித்த மக்கள் உள்ளத்தே ஆண்மையினை அள்ளி நிரப்ப, என்றுமே அழியாத காவியங்களை ஆக்கித் தந்து, நிலையான புகழைப் பெற்றவர்கள் சேர மன்னர்கள்.

வீரத்தில் மட்டுமல்ல, விவேகம் நிறை காதலிலும் கரை கண்டவர்கள். படைவன்மை மட்டுமல்ல, கொடை வன்மையும் கொண்டவர்கள். வீர நடை போட்டுச் சென்று நாட்டைக் காப்பவர்கள்.

சேரநாடு, சீராளர் பலரைப் பெற்ற நாடு. முத்தமிழ்க் கலைஞன் ஆட்டனத்தியைக் கொண்ட நாடு. காவிய நயம் சொட்டச் சொட்ட சிலம் பிசைத்த இளங்கோவன் வாழ்ந்த நாடு. மின்னும் தன் வாளினால் மிலேச்சர்களை வென்று, மன்னும் இமயத்தைத் தனது எல்லையாகக் கொண்டு இமயவரம்பன் மிடுக்காய் ஆண்ட நாடு. மங்கைக்குச் சிலை அமைக்க கங்கைவரை படை எடுத்து, பங்கமுடன் பேசிய கனக, விசயரின் சிரத்தில் கல்லேற்றி, சீர்பெற்ற செங்குட்டுவன் பேர் பெற்று ஆண்ட நாடு. கையில் வேலேந்தி, களம் நோக்கி விரைந்து சென்று, களிறு பெயரும் காளையரை காதல் மணம் புரிந்த கன்னியர்கள் வாழ்ந்த நாடு.

அங்கே............ஓர் நாள்.

செங்கதிரோனின் வெங்கதிர்கள் வெற்பிடை மறைந்த வேளை. இளந்தென்றல் இன்னிசை பாடிக்கொண்டிருந்தது. நாங்கள்தான் அதன் சொந்தக்காரர்கள் என்பதுபோல செவ்வல்லிப் பூக்கள் மெல்லவே சிரித்தன; தலையை அசைத்தன. அருவிக் கரையோரம், துருவித் துருவி யாரையோ தேடும் ஆரணங்குகளைக் கண்டு, அல்லிக் கொடிகளும் எள்ளி நகையாடின. துணையுடன் சென்றன புட்கள். இணையுடன் சென்றது அன்றில். ஓடைக் கரையோரம் ஒய்யாரமாக, உயர் கிளையில் கூடுகட்டி வாழும் பறவைகள் செங்குவளை மலர்கள் சிரிப்பதைக் கண்டு, செந்தீ நீரில் பற்றி விட்டதென்று எண்ணி, செட்டை முளைக்காத இளங்குஞ்சுகளை இரைச்சலுடன் எடுத்தேகின.

ஆனால் காதலனை இன்னும் காண வில்லை. கவல்கின்றாள் தலைவி. தலைவியின் நிலையினைக் கண்ட தோழி துயருறுகிறாள். இதற்கிடையில் தலைவியின் உள்ளத்திலே உருண்டோடும் எண்ணங்களோ, ஏராளம்! ஏராளம்! என்ன ஆகுமோ நம் காதல்? தொடராத காவியமாகுமா? இல்லை, முடியாத ஓவியமாகுமா? சுடரில்லாத் தீபமாகுமா? இத்துணை நாள் நான் எண்ணிய எண்ணங்கள், காதலுக்கிட்ட தூபங்கள் அனைத்தும் வீண்தானோ! நானும் வாழ்வேனோ!

"இல்லையில்லை. நீ உறுதியாக உன் காதலில் வெற்றி பெறுவாய்," —இப்படித் தேற்றுகிறாள் தோழி. ஆனால் அவைகளா தலைவியின் செவிகளில் ஏறும்! செவிடன் காதில் ஊதிய சங்கின் நிலைதான். தலைவியின் கண்கள் மட்டும்தான் பார்க்கும்—காணும் ஆற்றலைக் கொண்டுள்ளன. செவிகள்தான் கேட்கும் திறனை இழந்துவிட்டனவே! வழி மேல் விழிவைத்து, மொழி பேசாமல் இருக்கிறாள் தலைவி.

திடீரென்று செடிகளிடையே சல சலப்பு. அங்கே ஏன் செடிகள் அசைகின்றன? காற்றோ வீசவில்லையே! காட்டு விலங்குகள் எதுவும் செல்லுகின்றனவோ! தலைவிக்கு உடலெல்லாம் புல்லரித்தது, திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியால், தோழியையும் காணவில்லையே! எங்கு சென்றுவிட்டாள்? இவளது குணமே இப்படித்தான். நல்லவேளையில் நட்டாற்றில் விட்டுவிட்டு நகர்ந்திடுவாள். ஆ! ஈதென்ன! என் கண்களைப் பொத்துவது யார்? அப்பப்பா! எத்துணை வலிவுள்ளகைகள். கணையாழியும் தென்படுகிறதே. ஆம். உறுதியாக என் காதலர் கைகள்தான்.

கைகள் இரண்டும் கழன்றன. கண்கள் நோக்கின. காத்திருந்த கண்கள் வழியை நோக்கி நோக்கி பூத்துவிட்ட நிலையை உணர்ந்தான் தலைவன். "அன்பரே!" என்றாள் தலைவி. "என்ன?" என்றான் தலைவன். "இனியும் இந்தநிலை நீடிப்பது தவறு. விரைவில் நாம் மணம்புரிய வேண்டும். இல்லையெனில் தொல்லை தான்"—தலைவி குமுறினாள். "ஏன்?" என்று மீண்டுமொரு வினாக்கணை தொடுத்தான் தலைவன். "என்னுடைய பெற்றோருக்கு நம்முடைய காதலைப்பற்றி ஒன்றும் தெரியாது. நானும் சொல்லவில்லை. என்னை வேறு ஒருவருக்கு மணம்முடிக்க விழைகின்றனர்."

செவியில் கனல் நுழைந்தாற் போல் ஆயிற்று காதலர் தலைவனுக்கு. தலைவியும் இதற்குமேல் பேசவில்லை. கற்சிலைகள்போல் சமைந்திருக்கும் காதலர்களின் நிலை கண்டு விரைந்து வந்தாள் தோழி. நிலைமையைக் குறிப்பால் அறிந்து கொண்டு, தான் தீட்டிய திட்டத்தை வெட்டென வெளிப்படுத்தினாள். சட்டெனப் பிடிபட்டது தலைவனுக்கு. சரியென நகர்ந்துவிட்டான் அங்கிருந்து.

நாட்கள் பல கழிந்தன. ஓர் நாள் காலை, தலைவியின் வீடு அல்லோல கல்லோலப்பட்டது. சுனைநீராடச் சென்ற தலைவி வீடு திரும்பவில்லையாம். சேயைக் காணாத தாய் தவித்தாள்; அழுதாள் — அலறினாள்— நெஞ்சம் குமுறினாள். அதுவரை பொறுப்பரோ பெண்டிர். நடந்ததைக் கூறினாள் தோழி. கேட்டதும் கொந்தளித்தது தாயுள்ளம். பருவப் பெண் அல்லவா, மகள்? பாதை தவறினாள் என்று பதைபதைத்தாள். முறை தவறினாள் என்று முறையிட்டாள். நிறையழிந்தது என்று நெட்டுயிர்த்தாள்.

தாயின் நிலைகண்டாள் செவிலி. தாயின் துயர்போக்கத் தாவிச் சென்றாள் தலைவியைக் காண. கால்

(4-ம் பக்கம் பார்க்க)

# வஞ்சகம் வெல்லாது

ள் 21] ஆண்டு சந்தா ரூ. 8 (30—12—62) தனிப்பிரதி 16 காசு :[இதழ் 18


## பஞ்சப்போர் நடத்தும் பஞ்சையே!

அறுபது கோடிக்கு அரைவயிறு கஞ்சிக்கும் வழியில்லை என்பதறிந்தாய்!

★

அறுபதை முப்பதாகவாவது ஆக்கலாம் என எண்ணினாய்

★

வஞ்சக எண்ணங் கொண்டாய்!

அதன் விளைவு!

பஞ்சசீல இந்தியாமீது வெஞ்சமர் என்றாய்

★

வேலையற்றாய்! சோறற்றாய்

வீண் குழப்பம் கொண்டாய்

★

பெற்ற மக்களைப் பிணமாக்கிப் பீடுகாண விரும்பினாய்

★

நாடு அனைத்தும், நல்லவர் அனைவரும் பொல்லாங்கு புரியும்

உன் புன்னெறி கண்டு போர்க் கருவிகளும் பொருளும் தந்தனர்

★

## இது கண்டு கிலி கொண்டாய்-இப்போது வாபஸ் என்கிறாய்

★

பஞ்சையே! வஞ்சகம் வெல்லாது

பார்புகழும் பஞ்சசீலமே வெல்லும்

★

## வெற்றி நமதே

2-ம் பக்கத் தொடர்ச்சி

சென்ற இடமெல்லாம் கடிது சென்ருள். பூத்துக் குலுங்கும் பூஞ்சோலைகள்—நேற்றுத் தலைவி காத்து இருந்த அருவிக்கரையோரம்—வன விலங்குகள் உலவும் வெங்காடு, இவைகளைக் கடந்து கொடும் பாலை வனத்தை யடைந்தாள்.

இடைச் சுரத்தே சென்றுகொண்டிருந்தாள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை மணற்பரப்பு. காலைப் பொசுக்கிடும் கடுஞ்சூடு, என்ருலும் தளரவில்லை தாய். சென்றுகொண்டேயிருந்தாள். சிறிது தொலைவில் ஆளுருவம் கண்டாள் — ஆனந்தம் கொண்டாள். எதிரில் கண்டவர்களைச் சிரம்தாழ்த்தி வணங்கினுள். சீர்பெற்று வாழ்கவென வாழ்த்தினர் அறவோர். அருளொழுகும் முகம், இருள்பரவா நெறி, மருள்கொள்ளா விழியுடைய அறவோர்களை நோக்கி செவிலித்தாய் கூறலானுள்:

"அன்பு ததும்பும் அருள் நிறைப் பெரியீர்! தாக்கும் ஆதித்தனின் வெம்மைக் கதிர்களினின்று, தன்னைக் காக்கும் பொருட்டுக் கையில் தூக்கிய குடையுடையூர்! உறியில் தொங்கும் நீர்க்கரகத்தையும், சற்றும் ஒளிவின்றி முற்றும் ஒன்றென, தெற்றென விளக்கும் முத்தலைக் கோலையும் உடையீர்! ஐம்பொறிகளின் அவாவினை அடக்கி—ஒழுக்க நெறியில் வழுக்கா நின்று—அறம் தனைக்காக்கும் அரும் திறல் பெரியீர்! கனல்கக்கும் வெயிலிலும், கானகம் நோக்குதலைக் கடமையெனக்கொண்ட அறவோர்களே!

"என் மகள் ஒருத்தியும், வேறு ஒருத்தியின் மகனும் தம்முளே மனமுவந்து — உளமொத்துக் காதல் கொண்டனர்; களிப்படைந்தனர். இதுவரை அதை யான் அறியேன். இன்றுதான் செய்தி வெளிப்பட்டது. ஆனுல் ஊராருக்குப் பயந்து அவர்கள் இருவரும் இக்கானகத்தின் வழியே ஓடிவந்துவிட்டனர். கானகத்தைக் கடந்து இப்பாலை வழியே சென்ருலும் சென்றிருக்கலாம். அறவாழி அறவோரே! தாங்கள் அவ்விருவரையும் வரும் வழியில் கண்டீர்களா?"

செய்தியைக் கேட்காமலில்லை அறவோர்; கேட்டனர். விஞக்குறியுடன் தங்களையே நோக்கியவண்ணம் நிற்கும் தாயையும் பார்த்தனர். சிந்தனை தெளிவு பெற்றது. எண்ணங்கள் உருண்டோடின. உணர்வு பெற்றனர். அறிவுரை கூறத் தொடங்கிவிட்டார் அறவோர் தலைவர். அறவோர் அவர்? இல்லை யில்லை, அறவோர் உருவத்திலே நின்ற பெருங்கடுங்கோ கூறுகின்ருர்.

வியப்பாக இருக்கிறதா உங்களுக்கு! ஆம். பெருங்கடுங்கோவே தான். வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வேந்தன். நாட்டின் காவலன் மட்டுமல்ல; பொன்னேடுகளின் — புகழேடுகளின் நாவலனும்கூட. 'கற்ருேர் ஏத்தும் கலித்தொகை'யில் பாலைக்கலி பாடி, பண்டைத் தமிழ்ப் பெருமக்களின் தூய காதலை—சீரிய பண்பை இப் பாரறியப் பரப்பியவன். பாலைக்கலியென்ன? நல்லோர் நாடும் நற்றிணையா, குவலயம் புகழும் குறுந்தொகையா, அனைவரும் போற்றும் அகநானூரு, எங்கணும் இவனது பாடல்கள் இல்லாமலில்லை. அத்தனையும் சத்தான வித்தாரங்கள்—சொத்தான கருத்துக்களைக் கொண்ட முத்தாரங்கள். பாலைக்கலி பாடிய இவன் பாவலன் மட்டுமல்ல; பார்புகழும் காதற் பயிருக்கு நீரிட்டு வளர்த்த நிறை பண்பாளன். அதிகாரத்தால் அல்ல, அன்பால் தான் தங்நாட்டு மக்களை அடிபணியவைக்க முடியும் என்பதை அறிந்தவன். அந்த அன்பையும் அருட்பாக்களின் மூலம் அவனியில் பரப்பியவன்.

'காதலர் இருவரைக் கைப்பிடித்து அவர் காரியம் யாவினும் கை கொடுத்து' தங்நாட்டு மக்கள் இல்வாழ்வில் இணைந்து இன்புற்று வாழ வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட வேந்தன், இன்ருே உள்ளத்தால் ஒத்த காதற் கருவூலங்கள் ஊரைவிட்டு உடன்போக்கு மேற்கொண்ட செய்தியை எண்ணி, உளம் நொங்து, இடைச்சுரத்தே இன்காதலர்களைத் தேடி ஓடிவந்த பேதையின் உள்ளப்பான்மையை எண்ணி நொந்தார், அந்தணர்—இல்லையில்லை—வேந்தர். செவிலித் தாய்க்கு மட்டுமல்ல, செம்மை பெருத இச்செகத்திற்கே நல்லதொரு பாடம் கற்பிக்க எண்ணினுர். என்ன கூறுகிருர் கேளுங்கள்.

"அன்னையே! அடலேற்றின் ஆண்மையும், ஆடவர்க்குரிய பண்புகளாகிய அறிவு, கடைப்பிடி, நிறை, ஓர்ப்பு ஆகிய அனைத்தும் அமையப் பெற்ற அண்ணலன்ன அவ்வழகனேடு, அழிவிலாக் காதலுற்று, இடைச்சுரத்தே ஓடிச்சென்ற ஆரணங்கன்ன, அம்மங்கை நல்லாளைப் பெற்றெடுக்கும் பேறுபெற்ற பொற்புடைத் தாய் தாங்கள் போலும்! நீவிர் கூறிய நீள்புகழ்க் காதலர்களைக், கானகத்தே நாங்கள் காணுமலில்லை, கண்டோம்."

"ஆ!"வென்று திறந்தன தாயின் அதரங்கள். போதிமரத்துப் புத்தனுக்குத் தோன்றிய அறிவொளி போன்ற சுடர், அந்தணரின் சொற்களைக் கேட்ட செவிலியின் செங்காந்தள் மலரைப் போன்ற வதனத்தில் வீசியது. பின்னும் தான் கூறப்போகும் அறிவுரையை முற்றும் கேட்காது, அன்னை அகன்றுவிடுவாளோ என அஞ்சினுர் அந்தணர். சருக்கென்று ஆரம்பித்தார். 'அன்னையே!' என்று விளித்தார். ஏதுவும் புதிதாகக் கூறப்போகிருரோ என்று ஆவலுடன் எதிர்நோக்கினுள் செவிலி.

"அன்னையே! மலையிலே கிடைக்கிறது சந்தனக் கட்டை. நறுமணங் கமழும் சந்தனக் கட்டையை நாம் கொணர்ந்து அரைத்துப் பூசுகிருேம். பயன் பெறுகிருேம். ஆனுல் தன்னை வளர்த்தெடுத்த மலைக்கு சந்தனக் கட்டை எந்தவித நன்மையும் செய்கிறதுமில்லை. அதன் நறுமணத்தினுல் மலை எவ்வித பயனையும் பெறுவதுமில்லை. சீர்தூக்கிப் பார்த்தால், உனக்கும் உன் மகளுக்கும் உள்ள தொடர்பு அத்தன்மைத்தே!

"சீர்பெறு வெண் முத்துக்கள் கடல் நீரிலே பிறக்கின்றன; அணிபெறு அம்முத்துக்களை அழகாகக் கோர்த்து அணிகின்ருேம்; அழகு பெறுகின்ருேம். ஆனுல் தன்னிடத்தே முத்துக்களைத் தோற்றுவித்தாலும், உப்புநீர் அதனுல்அழகினைப் பெறுவதில்லையே! இவ்விதத் தொடர்புதான் நீயும் உன் மகளும் பெற்றது.

"அன்னையே! குரல், துத்தம், கைக்கிளை, உழை, இழி, விளரி, தாரம் என்னும் எழுவகையான இசையைச் சீரிய யாழிலிருந்து பிறப்பிக்கிருேம் — இன்பம் துய்க்கிருேம். யாழிலே பிறந்தாலும், தன்னைச் செவியுற்று நுகர்பவர்களுக்கு அல்லாமல், அவ்வேழிசையும், தன்னைப் பிறப்பித்த யாழுக்கு யாதொரு பயனையும் தருவதில்லை. சுற்றி வளைத்துப் பார்த்தால் நீயும், உன் மகளும் அந்தத் தொடர்பைப் பெற்றவர்களே!

"ஆதலின் அன்னையே! கற்பின் துணைகொண்டு, காதலன் கைப்பிடித்து, கானகத்தே சென்ற, காதற்கினியாளை எண்ணிக் கலங்காதே! கருத்தொருமித்து, கசட...

(13-ம் பக்கம் பார்க்க)

# சிந்தனைக்கு

பாண்டியன்

[உலகில் விஞ்ஞானம் வேகமான முன்னேற்றத்தில் நடைபோடுகின்றது! பூமியிலிருந்து ஏனைய வானமண்டலங்களுக்குச் சென்று வரத், திட்டங்கள் போடப்பட்டுவிட்டன! மனிதன் தனது உயர்ந்த அறிவினுல், மாரினர், சனி, அப்பல்லோ, இன்னும் பலவிதமான ஏவுகணைகளையும் கிரகங்களுக்கு அனுப்பிவைத்து அவை வானத்தை அளக்கப் போகின்றன! போய்விட்டன! ஆனுல்......

விஞ்ஞான மூலம் பெருமை பேசும் அதே மானிடன்தான் ஓர் சில அற்பக் காரியங்களுக்காக எதிர்பட்டு, முரண்பட்டு பலவிதமான தவறுகளைப் புரிகின்ருன். இது மனித இயல்பு என்ருலுங்கூடப், பகுத்தறிவுள்ள மனிதன் ஏன் சிந்தித்து உணர்ந்து செயல்படக்கூடாது. விஞ்ஞானப் புரட்சி நிகழும் இக்காலத்தில் அந்த விஞ்ஞானத்திஞலே நாம் அழிந்துபடுவோமோ என்கின்ற பயம் உலக மக்களிடம் வியாபித்துவிட்டது. காரணம், விஞ்ஞான மேன்மையடைந்தவர்களின் புரியாத செய்கைதான்! அவர்கள் ஒருவர்க்கொருவர் முட்டிக்கொண்டு நிற்கும்போது சாதாரணமான மனிதன் என்ன எண்ணுவான்? அவன் கற்பனை எப்படியெலாம் இருக்கும்? நண்பனுக்கு நண்பன் தன் வரலாற்றை விளக்கிக் கடிதத்தின் மூலமாக எழுதுகிருன்! அதைத்தான் இங்கு காண்கிறேம்]

அன்பு நண்பா!

அதோ! சிங்காரத் தோட்டம். செல்லமான நடையில் அதைத் தாண்டி வெளி முற்றத்தில் அடிவைத்து, பொன்னென்னும் புதுமனைவாயில் நுழைந்து; வைரத்தால் பரப்பப்பட்ட, ஒளிமிகுந்த தரைமேல் உலாவி வாழ்க்கையைச் சுவைப்பவனின்தோழனுக நீ இருந்திருந்தால், என்னவோ எடுக்க மனம் இன்றி, உடுக்க ஆசையின்றி வெளியே செல்வோமா? வீட்டுக்குள்ளேயே இருப்போமா? என்னும் நிலமையில் இருக்கும் நண்பனின் மடலைப் பார்க்கவேண்டிய சந்தர்ப்பமும் படிக்கவேண்டிய குழப்பமும் ஏற்பட்டிருக்காது.

நண்பா! நீ பணக்காரனென்ருே, பகட்டானவன்என்ருே பழரசம்தான் உண்ணும் உணவாகக் கொண்டவன் என்ருே, நான் எண்ணவில்லை. எண்ணமதில் என்னைப்போல நீ. வடிவமதில் உன்னைப்போல நான். எல்லாவிதத்திலும் ஒற்றுமையாய்க் காணப்படும் இருவரும் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்துகொண்டவர்கள், இல்லையா? நிறைந்து பழகிய நட்பினர் அல்லவா? நீ பூமி என்ருல், நான் நிலவு. நீ நிலவு என்ருல் நான் பூமி. வாழும் வாழ்க்கையைத்தான் கூற எண்ணினேன்! அது நன்கு சுவைக்கவுமில்லை. மிகுந்து கசக்கவுமில்லை. அதையே உனக்கு உரைக்கின்றேன்!

ஏழைக் குடியில் என் கரு உருவாகி விட்டபடியால் எண்ணமுடியாத வேதனைகளை உலக சந்தடியில் பெற்றேன். என்ருல் என் நிலமையைச் சமாளித்து வாழ இயலவில்லை. புண் வளர்ந்த நெஞ்சுடையானுகி விட்டேன். தீமையினை நான் அணுகவில்லை. ஆனுல், தீமையே என்னைப் பற்றிக்கொண்டது. ஒரு தோட்டத்தில் பழுத்த பழங்களில் சுவையில் வேற்றுமை காணப்படலாம். ஆனுல் ஓர் மரத்தில் பழுத்த பழங்களில் சுவை வேற்றுமை இருக்குமா?உலகமென்ற மர்த்தில் பழுத்த பழங்களில் எவ்வளவு வேறுபாடு. அப்பப்பா! காலத்தின் பெருமையோ சிறுமையோதெரியவில்லை.என்னைச் சிதைத்துவிட்டது.இந்தச் சமுதாயத்தில் என்னை நான் புரிந்துகொண்டேனே இல்லையோ, வாழ்க்கை புளித்துவிட்டது. ஏழ்மையில் உள்ளவன் அசைவின்றி அங்கேயே இருக்கிருன். பணம் படைத்தோன் பணத்தால் நிரப்பப்பட்டு வருகின்ருன். ஏழ்மை என்பது சமுதாயம் என்னும் காசின் இருபக்கங்களில் ஒன்ருே என்றுதான் எண்ணவேண்டியுள்ளது. ஊரும் உலகமும் திருந்தாத வினையா எனை ஆட்கொண்டது? நண்பா! தாய் வயிற்றில் சிசு வளர்வதுபோலச் சமுதாயத்தில் துன்பம் தோன்றி வளர்ந்து கொண்டேயிருக்கின்றதோ!

உன்னைப்போல நானும் இவ்வுலகம் செல்லும் வழியை ஆராய்வதுண்டு. எனது சிந்தனை இப்போது சமுதாய மனிதனின் நடவடிக்கைகளில் மிகவும் தீவிரமான ஈடுபாடு கொண்டுளது. என் துன்பத்தைப் பிறரிடம் சொல்லிக்கொள்ள மனமில்லை. உன்னிடம் கூறி ஆறுதல் தேடுகிறேன். அவ்வளவுதான். உலகம் எப்படித்தான் தோன்றியது என்பதை ஆராய்ச்சியின் வாயிலாகக் கண்டும் காணுமலும் இருக்கிருர்கள். ஒருமித்த முடிவுக்கு வரவும் அபிப்பிராயங்கள் இடம்கொடுக்கும். எவ்வகையாயினும் தோன்றிய உலகம் அழியுமா? அழியாதா? என்ற பிரச்சினை என்னை உறுத்திய வண்ணமாய் இருக்கிறது. ஏன் உல

கம் அழியக்கூடாது? அழியத்தான் செய்யும். இது என் கொள்கை. தத்துவஞானியா தீர்க்கதரிசியா என்றென்னை எடை போடாதே! அரசியல் ஞானி என்றெண்ணி மக்களின் உயிர் வாழ்க்கை 'பலிக்கடா'வின் தன்மையில் போவதால் உலகத்தை நல்வழிக்குக் கொணர முடியாது. இனி எவ்விதமான அடிப்படையிலும் உலகப் பொருளாதாரம் உலக மக்கட்கு எட்டாது. தகுந்த அளவில் சீராக்க முடியாது. அதனுல் உலகம் இயற்கையின்தன்மையால்மாறுதல் அடைந்தால்தான், வாழ்வு நிலை பெறும் என்றுணரும் தன்மைக்கு வந்திட்டாயா எனும் கேள்வி எழும் சிந்தனையாளன் ஆகிவிட்டாயா என்றும் கேட்டிடாதே! ஏதோ என் சிந்தையின் விந்தை. இருப்பிடம் தெரியாமல் எங்கேயோ எட்டிப் பார்க்கின்றது.

நண்பா! எதையெல்லாமோ கூறிக்கொண்டே போகிறேன் என்று நீ எண்ணுகிருய். ஏதோ என் ஆற்ருமை! உலகம் எப்படித்தான் அழியும் எனக் கற்பனை செய்ததுண்டா? உலகைப்பற்றிக் கவலை கொள்கின்றவர்களில் நானும் ஒருவன், உலகைப்பற்றிக் கவலை கொள்வதில் ஆச்சரியமில்லை. அது அப்படித்தான் மாறிச் செல்கின்றது. எத்தனை பிறப்புக்கள் தோன்றினும், எத்தனை கலாசாரம் உருவெடுத்தாலும், நாகரிக மாற்றங்கள் விளைந்தாலும் உள்ளத்திலிருந்து எழுகின்ற எண்ணத்தில் நஞ்சு நிரம்பியிருந்தால் சீர்படுமா உலகம்? கொஞ்சம் சிந்தித்துப்பார். நீயும் நானும் பல கல் தொலைவில் இருந்தாலும்கூட உனக்கு நானும், எனக்கு நீயும் கடிதத்தின் மூலம் எதையும் பகிர்ந்து கொள்கின்ரேம். உலகில் நம்மைப்போல நண்பர்கள் மிகக் குறைவு. உலக ஆற்றலுக்குச் செல்வோமெனில் மனிதர்கள் ஒருவர்க்கொருவர் புரிந்து வாழா நிலையிலும், மற்றவரை நம்பாமையாலும், தன்னையேதான் புரிந்து கொள்ளாமையாலும், பிறரைப்பற்றிய கருத்துக்களில் தவருன எண்ணங்களைச் செலுத்துவதனுலும் மனிதனுக்கு மனிதன், நாட்டுக்கு நாடு, பூசலும், பொருமையும், போட்டியும் பெருகி நம்மை அச்சுறுத்திக் கொண்டேயிருக்கின்றன.

இத்தன்மையில் சென்றுகொண்டிருக்கும் உலகைப்பற்றி என்ன தான் சொல்வதென்றும் தெரியவில்லை. எப்போதுதான் மனித நஞ்செண்ணங்கள் மாறும்? அந்நாள் வருமென எதிர்பார்க்க முடியுமா? முடிந்தால்; அதற்குப்பின் என்ன பிரச்சினை மனிதனை ஆட்கொள்ளும்? இதெல்லாம் ஆராய வேண்டும். உலகம் தோன்றிய காலம், படிப்படியாக வளர்ந்த விதம், இதையெலாம் ஏட்டில் எழுதி வைத்திருக்கிருர்கள் அல்லவா? பழைய வரலாற்று ஏடுகளைப் புரட்டு. அதில் வரையப்பட்ட மனிதனைப் பார்! இதோ! இன்றைய மனிதர்களாகிய நம்மையும் பார்! அன்று படிப்படியாக முன்னேறி வந்த வாழ்க்கை முறைகளைப் பார்! இப்பொழுது நாம் முன்னேறும் வழி வகைகளைப் பார்! நாகரிகம் நாகரிகம் எனக் கட்டிப் புரளும் மனிதனின் நலிந்த உருவத்தை நாகரிகமெனும் உச்சியில் பார்!

எவ்வளவு முன்னேற்றம்! எவ்வளவு விஞ்ஞானப் புரட்சி! அஞ்ஞானம் அழிந்தது மெய்ஞ்ஞானம் தெளிந்தது. விஞ்ஞானம் வளர்ந்தது. எழுச்சி கண்ட நவயுகத்தின் இதயத்தைத் திறந்து பார்! வளர்ந்து வரும் கலை! விஞ்ஞானப் புதுமை! கலாசார உண்மை! கடமை வெற்றி! அறிவொழுக்கம்! இன்னும் எத்தனையோ இப்படி வரும் உயர்ந்த செல்வம்போல!

நண்பா! இப்படியெல்லாம் சிந்தனை செய்துகொண்டிருக்கையில் ஓர் புதுமையை என் இதயம் கண்டெடுத்தது!

இப்பொழுது உன் சிந்தனையை என் ஊருக்குக் கொண்டு வா! என் எழில்மிக்க குடிசையினைப் பார்! கோபுரம் போன்று உயர்ந்த வீட்டிற்குப் பின்புறம்! மாளிகை அருகே மண்குடிசை. மாளிகை எதற்கு? மண்குடிசை எதற்கு? வசிப்பதற்கே! ஒன்றுக்கொன்று எவ்வளவு வேற்றுமைகள் உண்டு தெரியுமா! சமுதாயம் எனும் சங்கு எத்தனை வேறுபாடு கொண்ட குரல்களை ஒலிக்கின்றது பார்த்தாயா?

குடிசையின் வலப்புறத்தே குளம். குளத்தைச் சுற்றிலும் மலர்ந்து கிடக்கும் பூக்களைப் பார்! அதையும் சுவைத்துக் கொண்டே புதுமைச் சிந்தனையில் இருந்தேன்.


பிப்ரவரி 1-ல் வெளி வருகிறது !

அண்ணுவின் அணிவகுப்பில்
ஆற்றல் மிகுந்த படைக்கலன்!

# தென்னகம்

வார இதழ்

ஆசிரியர்: **K. A. மதியழகன், M. L. A.**

**தனி இதழ் 16 காசு**
**ஆண்டு சந்தா 8 ரூ.**

**எல்லா இடங்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.**

**'தென்னகம்'**
126, மவுண்ட் ரோடு, சென்னை-6.

ஏராளமான பசுக்கள். எருதுகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டும் முட்டிக்கொண்டும், வாலைத் தூக்கி, கால்களை உயர்த்தி, பகை உருவாய் மிரண்டும் வந்தன. பெரிய மாளிகை வீடு என்றேனே, அவ்வீட்டில் உள்ளவைகள்தான் அவை. அதே நேரத்தில் ஏழை இடையன் ஒருவன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தான். நெருக்கடியானது அவ்விடம். ஆடும், மாடும் கலைந்தன. எங்கேயோ குரைத்துக்கொண்டிருந்த நாய்களும் அங்கு வந்து சேர்ந்து, ஆடுகளை விரட்டின. எல்லாம் முட்டிக்கொண்டதும்; நிலத்தின் பரப்பு குறைந்ததால் ஏற்பட்ட நெருக்கடி குளத்தைக் கலக்கவேண்டிய நிலமை அவைகளுக்கு ஏற்பட்டது! குளத்து நீருக்குள் சில விழுந்தன, மூழ்கின, சகதியில் உழன்றன, பெருத்த மிருகமான மாடுகள், ஆடுகள், குளத்துத் தவளைகளை வெளியேற்றின. நண்டுகள் வெளிவந்தன. மீன்கள் சேற்றில் புதைந்து கொண்டன. மாட்டுத் தடங்களில் அழுந்தின! தவளைகள் படக்படக் கெனப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது.

இக்காட்சி கற்பனைக்கு வெகு அழகாக இருந்தது. மேலும் என்னுளம் கற்பனை வயமானது. கற்பனை—கற்பனை வேகமாய்ப் படர்ந்தது.

நண்பா! அழிவுப் போட்டிக்கு முந்திக்கொண்டிருக்கும் மனிதர் கூட்டம் என் கற்பனையில் உதித்தனர். சில நல்ல சேதிகள், காட்சிகள், கற்பனையில் கண்டால் அது உண்மையில் நடக்கக் கூடாதா எனத் தோன்றும். ஆனால் அழிவுப் படலக் காட்சி நேரில் கண்டால், அப்பப்பா சொல்லவும் வேண்டுமா? அந்த இருள் நிறைந்த போக்கு எவரைத்தான் பயமுறுத்தாது!

மக்கள் தங்களுக்குள் மோதிக் கொள்கிறார்கள். உலகத்தில் எத்தனை விதமான படைக்கலங்கள் உண்டோ, அனைத்தும் தங்களின் ஆற்றலின் திறனைக் காட்டின. உலகம் இருட்டில் மிதந்தது. எங்கும் ஆரவாரம், கோரக் கொலை, வெறிக் குரல், கூக்குரல், குருதி வெள்ளம் ஓடியது. இரத்தபாசமின்றி வெட்டிக் கொண்டு இறந்தார்கள். எங்கும் பிணக்காடு. நிலத்தில் மட்டுமா இக் கோலம்! வானில் குண்டுகள் வெடித்தன! தரை அழுதது. ஆகாயம் அலறியது. நீர்நிலை எங்கும் நஞ்சு படர்ந்தது. நீந்துவன எல்லாம் இறந்தன. மனிதனும் அதோடு இணைந்துகொண்டான். நிலத்தின் கொடுமை கண்டு அஞ்சியவர்கள் நீர்வழியில் ஏகினார்கள். ஆனால் கப்பல்கள் பிழந்தன! கரிய புகை மக்களைக் கொன்றது. பரிதாபமாக மரணத்தை அடைந்தனர். கடல் வாழ் பிராணிகளிடம் மனிதன் சிக்குண்டு தவித்தான். மனிதன் அவைகளைக் கொன்றான். கடல் பிணக்கிடங்கானது! பூமி நாற்றம் கொண்டது! மனிதன் அழிந்தான்! அவன் மட்டுமா அழிந்தான்; அவனுள் அவனோடு, உலகத்தில் உள்ள உயிர் வாழ்வனவெல்லாம் அழிந்தன! புல்லும் பூண்டும், புலத்தின் தன்மையும்கூட அழிந்தன, மாறின!

எங்கும் அமைதி! நீண்ட பெரும் அமைதி பூமி கொண்டது! புத்தரும், நபியும், ஏசுவும், காந்தியும் இருந்திருந்தால் உலகம் அழியுமா என்றும் கற்பனை செய்தேன். அவ்வுணர்வான கற்பனையும் பொய் என்றே பின்பட்டது. நேரம் விரைந்து அதன் வேலையைச் செய்துகொண்டிருந்தது. இப்பூமியில்தானே இவ்வளவும். கதிரவனும் தன் பணியைச் செய்துகொண்டிருந்தான்! இருண்ட உலகு விடிவு கொண்டுவிட்டதுபோல உணர்ந்தேன். அதிர்ச்சியும், மனித அழிவும் தாங்காமையால் நிலவு ஒளிந்து கொண்டதோ என்றும் என் பேதை மனம் சொல்லியது. மலைவெளியெலாம் மந்தைக் காடாகவும், கடலெல்லாம் சிறுகுளமாகவும், குன்றுகளாகவும் தோன்றின! பள்ளம் மேடாயும், மேடு பள்ளமாயும் காட்சி அளித்தன.

இந்தப் பயங்கரமான காட்சிகளுக்கிடையே பூச்சிகள் பறந்தன! புழுக்கள் நெளிந்தன! ஆம்; இப்பொழுது நாய்கள்கூடக் குரைத்தன. கனவா நினைவா என்று எண்ணமுடியாத நிலையில் கண்ணை நன்கு விழித்துப் பார்த்தேன். கற்பனை தடைபட்டது. குரங்காட்டி குரங்குடன் என்னைக் கடந்து சென்றுகொண்டிருந்தான். நாய்கள் அவனைத் தொடர்ந்து சென்றன. அவன் அக்குளத்தையே நோக்கியவண்ணம் சென்றான்.

நண்பா! இப்பொழுது அக்குளம் வெறிச்சென்றிருந்தது. சற்றுமுன்பு நடந்த கலவரத்தைக் காணோம்! உலக அழிவைக் கற்பனையிற் கண்டாயா? என்ன கூறுகிறாய்? இப்படி அழிந்தாலும் அழியலாம். கனவு நினைவாவதும் உண்டு.

நான் கற்பனையில் பார்த்த உலகில் விஞ்ஞானம் இல்லை. வீராப்பு இல்லை! கல்வி இல்லை! கலை இல்லை! கவிஞன் இல்லை! கலைஞன் இல்லை! ஆசிரியன் இல்லை! எழுத்தாளன் இல்லை! ஏன்? இன்பமும், துன்பமும் கூட இல்லை! கடவுள் இல்லை! ஆத்திகன் நாத்திகன் இல்லை! பாடகன் இல்லை! பாட்டும் இல்லை! புலவன் இல்லை! புரவலன் இல்லை! கோட்டம் இல்லை! கோயில் இல்லை! பாட்டாளி இல்லை! பணக்காரன் இல்லை! தொழிலாளி இல்லை! முதலாளி இல்லை! ஏழை இல்லை! இலட்சாதிபதி இல்லை! புல் உண்டா! புழு உண்டா! பயங்கரமான நீண்ட பாலைவெளிதானே கண்டேன்! அதிகம் அறிவு படைத்த மனிதன் தன் அகம்பாவத்தால் அழிந்தான்!

ஆம்; நண்பா! மனிதன் விஞ்ஞானம் விஞ்ஞானம் என்று மகிழ்ச்சி கொள்கிறான் தன் கண்டுபிடிப்பால். ஆனால் ஓர் மெஞ்ஞானி மட்டும் அழியப்போகும் உலகின் மிகப் பெரிய இழப்பைக் கண்டு மனம் வேகிறான்! மெஞ்ஞானி ஆராய்கிறான் அழிவைப்போக்க! ஆராய்ச்சியில் எல்லையை அடைந்தால் அவன் தன்னைத்தானே இழந்துவிடுகிறான். உலகைச் சபிக்கிறான்! பார் நண்பா! உலகம் துன்பமயமாகத்தான் வாழ வேண்டுமா? நிம்மதியும், நீண்ட சுகமும் நமை அணுகப் பயம் கொள்கின்றதே!

எப்படி வாழ்வது என்ற கேள்வி முற்றி, உணவும், உடையும் இல்லாது தவிக்கும் மக்களையும், அதன் அரசையும் உலகில் கண்கூடாகக் காண்கிறோம்.

நாம் உற்பத்தி செய்த உணவுப் பொருளை என்ன செய்வது என்று தெரியாமல் சிந்திக்கும், நாட்டையும், நாட்டு மக்களையும் காண்கிறோம்.

பார்! சமுதாய அமைப்பில் எவ்வளவு வேற்றுமைகள்! இவ்வமைப்புச் சரிதானா? வளமற்ற நாட்டில் மக்கள் தொகை பெருத்துவிட்டது. வளமுள்ள நாட்டில் மக்கள் அதிகமில்லை.

நாம் சாதாரண குடும்பத்தில் தோன்றியவர்கள். சாதாரண வாழ்வியலில் எனக்கு இம்மாதிரி எண்

ணங்கள் தோன்றுகின்றன! வாழ்வை எப்படி நடத்துவது என்ற பிரச்சினை சூழ்ந்துவிட்டது. அன்றுடம் உழைத்து உண்பவனுக்கு வேலை கிடைக்கவில்லையென்ருல், அவன் என்ன எண்ணுவான்? தூக்குப் போட்டுக்கொள்ளத் தயங்குவானு? இச் சமுதாயம் வாழவா வேண்டும்?

மனிதவாழ்வு ஓர்சிறுகதை. இதையெல்லாம் உணர்ந்தவன் அடங்கியும், ஒடுங்கியும் வாழ்கிருன். மற்றவன் என்னென்ன நாடகம் ஆடுகிருன்! வம்பு, பொய், பொல்லாங்கு, ஆக்குகிருன், அழிக்கிருன், நினைக்கிருன்; நினைத்ததை வெறுக்கிருன். பேச்சொன்று, செயல் ஒன்று! அன்ருடம் கொடுமைகள், பழிகள் புரிகின்ருன்.

மனிதா உலகைப்பார்! உன்னையும்பார்! மற்றவரையும் நினைத்துப் பார்!

மனிதன் தினமும் செய்யும் விளையாட்டுக்கள் எத்தனையோ! தெரிந்தோ, தெரியாமலோ, அறிந்தோ, அறியாமலோ, செய்த தவறை மனிதன் மறந்துவிட; அவன் குணமும், மற்றவன் குணமும், இடந்தரவில்லை. மன்னிக்கும் மனப்பான்மை சிலருக்கு இல்லை. மன்னிப்புக்கிடைக்கும் என்பதற்காகத் தவறு செய்பவர்களும் குறையவில்லை. மனிதன் மாறிவிட்டான் என்று ஓர் பக்கம் குரல் கேட்கிறது. மறுபக்கம் மனிதன் மாறவில்லை என்ற எதிரிடையான கருத்துடன் மற்ருெரு குரலும் கேட்கிறது.

எண்ணிப்பார்! பழமையிலிருந்து புதுமைக்குள் புகுந்த மனிதன், மீண்டும் புதுமையினின்று பழமைக்குள் நுழைந்திடுவான். ஏற்றிய விளக்கை நம்மையறியாமலே சிலநேரம் அணைத்திடுதல்போல மனிதன் தன்னை அழித்துக்கொள்வான்!

இன்னுென்றும் பார்!

நேற்றுக் காலையில் ஓர் மனிதரைச் சந்தித்தேன். மிகவும் அழகான முறையில் உறவாடினுர். மற்ருெருமுறை அவரைச் சந்தித்த போது முகமூடி அணிந்த துரோகி என்பதை உணர்ந்தேன். மனித குணம் ஆராயமுடியாத ஓர் சிறந்த கலைப்பொருள்!

மானிடர்களில் சிலர் விஞ்ஞான முறையில் எங்கோ கண்ணுக்கெட்டாத தொலைவில் அமைந்து கிடக்கும் மற்றக் கிரகங்களை ஆராய்கிருர்கள். அதன் தன்மைகளை விரிவான முறையில் ஆராய்ச்சி செய்கிருர்கள். ஆங்காங்கே மனிதர்களைக் குடியேற்ற ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. காலத்தைக் கணக்கிட்டு ஆங்காங்கே போய் ஆராயும் அறிவைக்கொண்ட விஞ்ஞான மனிதன், இங்கு வாழ்கின்ற சாதாரண மானிடன் ஒருவனின் குணங்களை ஆராய முடியவில்லை. உண்மையான மனக்கிடக்கை, அவன் ஆசாபாசம் தன்மை இவைகளை எந்த விஞ்ஞானியாலும் மெய்ஞ்ஞானியாலும் காணமுடியவில்லை. உன்னுல் மறுக்கமுடியுமா நண்பா?

ஒருவன் என்னிடம் வந்து தன் மனதில் உள்ள எல்லாவற்றையும் கூறினுன். அவனை ஒருத்தி காதலித்தாளாம்! காதல் விளக்கை ஏற்றி வைத்தவளே அதை அணைத்துவிட்டாளாம். வேறு ஒருவனைத் தேடிஓடி விட்டாளாம்! காதலன் உருகினுன். இனிக்கப்பேசிக் காதலித்தவள் எங்கோ ஓடிவிட்டாள். எண்ணங்கள் மாறும் திறன்பார்! அவனே எதையும் ஆற்றமுடியாது தவிக்கிருன்.

வழக்கமாக என்னிடம் பிச்சை வாங்க ஒருவன் வருவான். அவனை நேற்றுச் சந்தித்தேன். வயிறு ஒட்டிப்போய் மிகுந்த வேதனை நிறைந்தவனுய்க் காணப்பட்டான். மூன்று நாளாகப் பட்டினியாம்! என்னிடம் இருந்ததைக் கொடுத்தேன். பிச்சைக்காரர்கள் பெருகவில்லை என்ருல் இந்நிலை வருமா?

மனிதன் நேற்றுவரை குரங்கு, பூனை, நாய், எலி இவைகளைக் கிரகங்களுக்கு அனுப்பினுன். இன்று அவனே செல்கிருன். ஏதோ மாற்றம் தென்படுகிறது.

வீட்டில் உறையும் மனிதன் வீட்டையே தீ இடுகிருன்! விளக்கை ஏற்றியவனே அணைக்கிருன்! விளக்கு ஒருவனுல் உற்பத்திசெய்யப்பட்டாலும், உபயோகப்படுத்துகிறவர்கள் வேருெருவராக இருக்க முடியும். உலகம் அழிந்துபோகச் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. நீங்கியும் விடுகின்றன. உயிரைக் கையால் பிடித்துக்கொண்டு வாழும் வாழ்வு எனக்கு வெறுப்படைந்து விட்டது.

உலகே! உன் எண்ணத்தில் எப்பொழுது நன்மை பிறக்குமோ!

நண்பா! உன் கடிதத்தை எதிர்பார்க்கிறேன். நீயும் உன் எண்ணங்களைத் தெரிவி!

அன்பன்
மு. துறமுனி.

*


## திராவிட நாடு பொங்கல் மலர்

## விற்பனையாளர்களுக்கு

பழைய பாக்கியும் மலருக்குரிய முன் பணமும், அனுப்பாத விற்பனையாளர்களுக்கு **மலர் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டா** தென்பதைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

**பொறுப்பாளர்.**

# வாழ நினைக்கிறேன்!

மாலைப்பொழுது. மந்தமாருதம் வீசும் நேரம். எண்ணற்ற எண்ணங்களால் என் மனதை அலைக்கழிக்கும் வீட்டிலிருந்து புறப்பட்டு, அமைதியின் இன்பத்தை அனுபவிக்கக் கடற்கரை வந்தேன்!

ஆனால், நான் என்ன கொடுமை செய்தேனோ? அந்தப் பாவை என்னருகில் வந்தாள். என்னைக் கடந்து சென்றாள். சென்றவள் என்னை ஓரக்கண்களால் கண்டவாறே சென்றாள். சென்றவள், சென்றேவிடவில்லை. திரும்பவும் வந்தாள். வரும்போதும் தன் கண்களுக்கு என்னைக் காணும் கடமையைத் தர மறந்தாளில்லை! எனக்குப் பத்து அடி தூரத்தில் உட்கார்ந்தாள். உட்கார்ந்தவள், என்னையே உற்றுநோக்கினாள்!

அமைதியைப் பெற வந்த என் மனம், ஆசையைப் பெறத் துடித்தது! ஆசை, வெட்கமறியாது என்பார்கள்! ஆனால், என் ஆசை வெட்கத்தோடு பிறந்தது!

வெட்கத்தால், அவள் முன்னிருந்து எழுந்திருந்தேன், வேறு இடம் நோக்கிச் சென்று அமர! எழுந்து நடந்தவன், இனிய குரல்கேட்டுத் திரும்பினேன்!

மறதியால் அவமானப்பட்ட நான், அவளுடைய நினைவுபடுத்துதலால் நன்றிகூறி, கீழ் விழுந்துவிட்ட என் 'பணப்பை'யை எடுத்து நடந்தேன்.

நன்றியை மட்டுமே என்னிடமிருந்து எதிர்நோக்கா அந் நங்கை, என்னை 'கைதட்டி' அழைத்தாள்! நான் கைகட்டி அவளிடம் சென்றேன்! அவளோ, விரல்காட்டி உட்காரவைத்து, என்னைத் தன் கண்காட்டி அன்பால் சுட்டிக் கொண்டிருந்தாள்!

கலகலப்பாகப் பேசினோம்! காதலர்களானோம்! கடற்கரைக் காதல், பிறகு நகர்ப்புறக் காதலாகவும் மாறியது!

மலர் உதிர்ந்து பிஞ்சாகிய காய், எத்தனை நாட்களுக்குத்தான் காயாகவே இருக்கும்? என்றேனும் ஒரு நாள், கனியத்தானே போகிறது! ஆயினும், அது கனிவதற்குள் எத்தனை பறவைகள் ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன!

**அன்பு. த. நாராயணசாமி, L. C. E.**

அதுபோலத்தான், கண்பார்த்து, மனமொத்து காதலர்களாகிய நாங்கள் எத்தனை நாட்களுக்குத்தான் காதலர்களாகவே இருப்போம். என்றேனும் ஒருநாள், கணவன்—மனைவி எனும் தம்பதிகளாகவேண்டியதுதானே? அத்தகைய உரிமை உறவிற்குத் 'திருமணம்' நடைபெற நாங்கள் எவ்வளவு ஆவலாக இருந்தோம் தெரியுமா?

ஒரு நாளா, இரண்டு நாட்களா? எத்தனை ஆண்டுகளுக்குத்தான் அவளும் எனக்காகக் காத்திருப்பாள்? ஆவலோடுதான் இருந்தாள். ஆனால், அவளுடைய பெற்றோர்கள் அதை உணரவேண்டாமா! அவர்கள் அதை உணர மறுத்தாலும், இவள், அவர்களுக்கு அதை—அதாவது நான் பொருள்சேர்க்க முற்பட்டிருப்பதை உணர்த்தியிருக்கலாமே!

உண்மையிலேயே, அவள் அப்படிச் செய்யாதது, அவளுக்கு என் மீது அன்பு இல்லை, காதல் இல்லை என்பதையே எனக்கு முழுக்க முழுக்க உணர்த்திவிட்டது!

ஆம்! யார் என்னை மனமொத்துக் காதலித்தாள் என்று சொன்னேனோ, அவள் என்னை மறந்துவிட்டாள்! இல்லை, இல்லை! என்னை மணமுடிக்க மறுத்துவிட்டாள்!

ஆம்! அவள்மீதும் தவறில்லைதான்! அது அவளுடைய அறிவைப் பொறுத்தது! என்னிடம் பணமில்லாததைத் தெரிந்துகொண்டாள். அதனால், பண்பு இல்லை என்ற முடிவிற்கும் வந்துவிடலாமா? நான் ஒரு எழுத்தாளன் என்பதை அறிந்தவள், என்னை எப்படி ஒரு ஏகபோக சொத்திற்கு உரிமையாளனாக எண்ணிக்கொள்ள முடியும்?

“ஏழை எழுத்தாளன் நான். பிடிக்குமா உனக்கு என்னை?” என்றேன்.

“ஏழையோ, பாழையோ! எழுத்தாளன்தான் எனக்குவேண்டியவர்”. என்றபோதே, அவளின் வார்த்தைகளில் நான் மயங்கிவிட்டேன். எழுத்தாளனைக் காதலிப்பவளையே திருமணம் செய்துகொள்ளவும் விழைந்தேன். அதையே என் குடும்ப வாழ்க்கையின் இலட்சியமாகவும் கொண்டிருந்தேன். என் இலட்சியத்திற்கே வெற்றிக்கொடி நாட்டவந்த நங்கை அவளை, என் 'இலட்சியக் காதலி' யாகவே கொண்டேன்.

அவளைக் காதலியாகக் கொண்ட அன்றிருந்தே, என் கற்பனை ஊற்றுச் சுரந்தது, அளவிற் கடங்காது!

எழுதினேன், எழுதினேன்! அப்படி எழுதினேன்! எழுதி என்ன பயன்? புகழ் கிடைத்தது! பொருள் கிட்ட வில்லையே!

'கிட்டாதாயின் வெட்டென மற.' என் மனதிலிருந்து மறையவில்லை, இப்பழமொழி! ஆனால், கிட்டாத அப் பொருளைக் கிடைக்கப் பெற்றுலல் லவோ, கிடைத்தற்கரியதான கிளி மொழியாள், கிண்கிணிச் சிரிப்பாள், எனக்கே கிடைப்பாள்?

ஆகவே, அப்பழமொழியை நான் வெட்டென மறக்கவில்லை. பெரிதும் முயற்சி செய்தேன், பொருளீட்ட! உறங்குவதையும் மறந்தேன்; உண் பதையும் விடுத்தேன்! உற்ற காரி யத்திலேயே கண்ணுக இருந்து உழைத்தேன்!

இந்த நிலையிலே, ஒரு நாள்! என்னைக் கண்டாள் என் காதலி! என்ன நினைத்தாளோ? எப்படி நினைத்தாளோ! எத்தகைய முடி விற்கு வந்துவிட்டாள்!

ஆம்! அவள் முடிவு, என் வாழ்க்கைக்கே முடிவாகிவிட்டது! பக்கவாட்டில் சுற்றிக்கொண்டிருந்த உலகம், மேலும் கீழுமாகச் சுற்று வதுபோல் எனக்குப் பட்டது!

கொந்தளிக்கும் கடல், வறண்ட பாலையாகக் காட்சியளித்தது! என்ன செய்வேன்? எப்படி அவள் முடிவைத் தாங்குவேன்? ஐயோ! வலி எடுக்கும் என் நெஞ்சு வெடித்து விடக் கூடாதா?

'உலகிலே, இனி என்னைப்போல யாருமே மகிழ்வுகொள்ள முடியாது' என்றிருந்தேன், அவள் என்னேடு இருந்தபோது! ஆனல் இன்றே, என்னைப்போன்ற ஏமாளி உலகில் இருக்கமுடியாது!

இனி, எனக்கு வாழ்விலே மகிழ்வே கிடையாது! வாழ்வே கிடைக்காத எனக்கு, மகிழ்வு எங்கே கிடைக்கப் போகிறது? என்னுள்ளத்திலே இருந்து பிறக்கும் உண்மையான மகிழ்ச்சியை இனியும் என்னுல் எப்படிப் பெறமுடியும்?

ஆனாலும், அந்தக் கள்ளி, இன் னெருவனிடம் அப்படி மகிழ்ச்சியாக இருக்கிருளே! அவளை அப்படியே கொலை செய்தால்தான் என்ன?

எனக்கு மகிழ்ச்சியாக, 'அன்பே, அத்தான்!' என்று அழகொழுகப் பேசிய அங்நஞ்சு, இன்று, வேறு யாருடனே, கொஞ்சிக் குலவி மகிழ் வெய்தி இன்ப வெள்ளத்திலே நீந்து கிருளே!

இதைப் பார்த்துக்கொண்டு என் னுல் எப்படி மகிழ்வோடு இருக்க முடியும்?

'பிறர் அடைகின்ற மகிழ்ச்சியைப் பார்த்து, மகிழ்ச்சியடையப் பழகு. அதுதான் உண்மையான மகிழ்ச்சி யாகும். அதுமட்டுமல்ல, இத்தகைய மகிழ்ச்சி ஒன்றுதான் உனது வாழ்க் கையை அழகு செய்யும்' — யாரோ எதிலோ எழுதியிருந்த இந்தக் கருத்து என் நினைவிற்கு வந்தது! வந்து என்ன செய்ய?

அவள் இன்னெருவனேடு அடை கின்ற மகிழ்ச்சியை பார்த்தா நானும் மகிழ்ச்சியடையப் பழகவேண்டும்? எனக்கு இனி மகிழ்வே வேண்டாம்! மகிழ்வே வேண்டாத நான், அதைப் பார்த்துப் பழகவும் வேண்டாம்! உண்மையான மகிழ்ச்சி வேறு, பொய்ம்மையான மகிழ்ச்சி வேறு தான்!

பொய்யான மகிழ்ச்சியால் மன திற்கு நலமில்லை. வாழ்க்கைக்குப் பயனுமில்லை! உண்மையான மகிழ்வு தான் வாழ்க்கைக்கு அழகு செய் யும்! ஆனல், எங்கேஎன் வாழ்க்கை?

எத்தனையோ இளம் காதலர்களை ஒன்று சேர்த்து, வாழவைத்து, அவர்களுக்கு 'வாழ்க்கை' இதுதான் என்று தெரியவைத்துள்ளேன், என் கதைகளிலே! ஆனல், என் நிலை யில், அந்த 'வாழ்க்கை'யே அமைய வில்லையே!

நான் என்ன செய்ய? கன்னி அவளை நான் காதலிக்காமலேயே இருந்திருந்தால், ஒருவேளை, எனக்கு வாழ்க்கை அமைந்திருக்குமோ, என் னவோ?

மூடிக்கிடந்த எனது இருதய வாசலை, 'காதல்' எனும் காற்றுல் திறந்து, கன்னியவள், என் காதலி, உள்ளே நுழைந்துவிட்டாள்! நுழைந்துவிட்ட அவளை, நான் எப்படி வரவேற்காமல் இருக்கமுடியும்?

எதிர்நோக்கி வந்தவள், இப்படி எனக்கு ஏமாற்றத்தை அளிப்பாள் என்று எண்ணவேயில்லை நான்!

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பது பழமொழி. ஆனல், அத்திரை கடலைக் கடக்கவும் என் னிடம் திரவியம் இல்லையே! நான் என்ன செய்ய?

நான் ஏன் உலகில் பிறந்தேன்? எதற்காக அவளைக் காதலித்தேன்!

அதிலும், இந்த எழுத்துத் தொழிலை ஏன்தான் மேற்கொண் டேனே? இப்படி, என் வெறுப்பு ஒவ்வொன்றின் மீதும் படர்ந்து வரும்போது, என் கண்களுக்குக் கெதிரே, நான் கொண்டுள்ள 'பொது வாழ்க்கை இலட்சியப் பாதை' தெரிந்தது! என்னை நானே சிறிது சிறிதாகத் தேற்றிக்கொண் டேன்! குடும்ப வாழ்க்கை இலட்சி யம் அழிந்தொழிந்தது! ஆனல், பொதுநல வாழ்க்கை இலட்சியம் அழியவில்லையே! அதற்காகத் தானே, இந்த எழுத்துத் தொழி லையே மேற்கொண்டேன்! இந்த இலட்சியத்திற்காக உழைப்பதே என் வாழ்க்கைக் குறிக்கோள் ஆயிற்றே! அப்படியிருக்க, எனக்கு வாழ்க்கை அமையாமல் போவ தெப்படி?

குடும்ப வாழ்க்கை இல்லாவிடி னும், பொதுநல வாழ்க்கை எனக்கு நிச்சயம் உண்டு.

என் இலட்சியப் பாதையில், குறுக்கிட்ட முட்புதர் என்றுதான் அவளை இப்போது தீர்மானிக்கி றேன். முட்புதரால் ஏற்பட்ட இன் னல்களையும் ஏற்றுக்கொண்டுவிட் டேன். முட்புதர் என்னை விட்டும் போய்விட்டது. இனி நான் வாளா இருக்கலாமா? 'விடுதலை நகர்' நோக்கிச் செல்லும் என் இலட்சியப் பாதையில் நான் ஏறுநடை போட்டுச் செல்லவேண்டியது தானே!

ஆம்! நான் துணிந்துவிட்டேன்!

என் நாடு விடுதலை பெறும் எனும் என் ஆசை என்றேனும் ஒரு நாள் நிறைவேறியே தீரும்! ஐய மில்லை!

என் ஆசை வலையிலிருந்து பிரிந்து சென்ற என் காதலியான பட்டுப் பூச்சியை நான் மறந்துவிட் டேன்! தோல்வியை நினைத்து வாடும் கோழையல்ல நான்! போன தைப் போனல் போகட்டும் என்று விட்டு விடுபவன் நான்!

'பட்டுப் பூச்சி உள்ளேயிருக்கும் வரைக்கும் அது தன்னைச் சுற்றிக் கூடுகட்டிக்கொண்டு பட்டு உற் பத்தி செய்துகொண்டேயிருக்கும். ஆனல், அது தன் பந்தத்தை

(12-ம் பக்கம் பார்க்க)

# "இரவல் மனைக்கட்டு"

நல்ல வெயில் நேரம்!

வேலை செய்த களைப்பால் கால்கள் நடக்க முடியாமல் சோர்ந்த நடையுடன் வந்த முருகனை, அவன் தோட்டத்திலுள்ள தென்னையின் நிழலும், வாழையின் காற்றும் வரவேற்புக் கூறிச் சோர்வைப் போக்கின. எல்லாம் அவன் உழைப்பின் பலன்தானே! அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

ஐந்தாண்டுகட்கு முன் வெட்டவெளியாகக் கிடந்த இடம், இப்போது தென்னை மரங்களும் வாழை மரங்களும் நிறைந்த தோட்டமாகவே காட்சியளித்தது.

அந்தத் தோட்டம் அவனுக்குச் சொந்தமான விதமே வேறு. அதற்குக் காரணமான நிகழ்ச்சி அவன் மனத்திரையில் ஓடியது......

இரவல் மனைக்கட்டில் குடியிருந்த ஒரு ஏழையை, அவன், அந்த மனைக் கட்டைத் தனது என்றே சொல்லி விடுவானோ என்று பயந்த அந்நிலத்தின் முதலாளி, அவனை அம்மனைக் கட்டை விட்டு வெளியேறச் சொன்னார். 'ஏனுங்க வெளியேறணும்... நான் இதில் இருந்தால் உங்கள் நிலத்தையா எடுத்துகிட்டு என்னுடையதுஎன்றுசொல்லிடுவேன்? அப்படி நினைக்க மாட்டேங்க......' என்றான் அந்த ஏழை. அவரோ 'உடனே உன் வீட்டைப் பிரித்து விடு. இந்த நிலத்தில் ஒரு வீடு கட்ட வேண்டும். நீ எங்கேயாவது போய், வேறு இடத்தில் வீட்டைக் கட்டிக் கொள்' என்றார். 'நானோ ஏழை... இப்போதே வீட்டைப் பிரித்தால், வேறு வீடு கட்டப் பணம் வேண்டும். அப்படியே பணம் கிடைத்தாலும், மனைக்கட்டுக் கிடைத்தால்தானே!!' இதனைப் பார்த்த முருகன் அந்த ஏழைக்காகப் பரிந்து பேசியும் பயனில்லாமல் போய்விட்டது. நிலக்காரனின் பிடிவாதத்தால், உடனே அந்த ஏழை வீட்டைப் பிரித்துக் கொண்டு எங்கோ போய்விட்டான்.

அந்த ஏழையைப்போல்தான் முருகனும் அவனுடைய முதலாளியின் மனைக்கட்டில் குடியிருந்தான். அந்த ஏழைக்கு ஏற்பட்டதுபோல், தனக்கும் ஏற்பட்டால்...... என்று முருகன் எண்ணினான். அதனால் எப்படியாவது சொந்தமாக மனைக் கட்டு வாங்க எண்ணித், தன் செலவுகளில் சிக்கனப்படுத்திக் கொஞ்சம் கொஞ்சமாக மிச்சப் படுத்தி, அவனுடைய முதலாளியிடத்தில் கொடுத்துவந்தான்.

முருகன் முதலாளியிடத்தில் கொடுத்த பணம், ரூபாய் ஐந்நூறு

ச. கனகராசன்

தேறிற்று. தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தான். அவனுடைய விருப்பப்படியே மனைக்கட்டிற்கு, வெட்டவெளியாகக் கிடந்த இடத்தைக் காட்டி அதில் வீட்டைக் கட்டிக்கொள்ளச் சொன்னார். முருகனும் வீட்டைக் கட்டிக் கொண்டு அந்தத் திடலைச் சாசனம் எழுதித்தரச் சொன்னான். அதற்கு அவர் சாசனம் செய்துதருவதாகச் சொல்லிக் காலத்தைக் கடத்தி வந்தார். ஆனாலும் முருகனுக்கு நிம்மதியில்லை.

பகல் பூராவும் சம்பளத்திற்கு முதலாளிக்கு வேலை செய்துவிட்டு, இரவெல்லாம் மண்வெட்டி பிடித்து வெட்டிச் சீர்திருத்தினான். அதனைப் பண்படுத்த பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. இரவென்றும் பகலென்றும் பாராது உழைத்துச் சீர்திருத்திய திடலில், தென்னையும் பலாவும், மாவும் வாழையும் போட்டுப் பயிராக்கினான். புல்கூட முளைக்காத வறண்ட பூமி, எழில்வளமும் பயிர் வளமும் மிகுந்த தோட்டமாகவே உருப்பெற்றது.

முருகனின் முதலாளி, முருகன் வீட்டுப்பக்கம் வந்தார். அவரால் அவருடைய கண்களையே நம்ப முடியவில்லை. பொட்டலாகக் கிடந்த திடலில் குலைகுலையாகக் காய்த்துத் தொங்கும் தேங்காய்களையும், பலா மரத்தில் காய்த்துத் தொங்கும் பலாப்பழங்களையும், வாழைத் தார்களையும், மாங்கன்றுகளையும் பார்த்தவர் ஆச்சரியத்திலாழ்ந்தார். பாலையாகக் கிடந்த பகுதி சோலையாகக் காட்சியளித்தால், யாருக்கும் ஆச்சரியமாகத்தானே இருக்கும். அப்போதே அவர் மனதில் திட்டம் தீட்டிவிட்டார். இந்த நிலத்தை முருகனுக்கு கொடுக்காமல் ஏமாற்றினால் என்ன என்று. அவன் கொடுத்த பணத்திற்கு நோட்டும் இல்லை, சீட்டும் இல்லை. நிலமும் சாசனம் எழுதிப் பதிவு செய்யவில்லை. அப்படியிருக்கும்போது, இவன் தன் நிலம் என்று சொன்னால் சட்டப்படி எப்படிச் செல்லும்? என்ற வஞ்சக எண்ணத்துடன் தோப்பைச் சுற்றிக்கொண்டிருக்கும்போது, 'தொப்' 'தொப்' என்ற சப்தம் கேட்டது. அவருக்கு திகைப்பாயிருந்தது. தன்னுடைய தோப்பில் இவ்வளவு துணிவோடு யார் தேங்காயைப் பறிப்பது' என்று அதட்டிக் கொண்டே தேங்காய் விழுந்த பக்கம் போனார். 'யாரடாது தேங்காயைப்

பறிப்பது' என்ற அதிகாரக் குரலைக் கேட்டவுடன் முருகனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"நான்தான் எஜமான்......ரொம்ப வறட்சியா யிருந்தது அதனால்தான் இரண்டு இளநீரைப் பறித்தேன்."

"நீ இதுமாதிரி தோப்பைக் காலி பண்ணினா, தோப்பு தோப்பாகுமா? இது மாதிரியெல்லாம் இனிச் செய்யாதே!"

"என்னங்க...... என்னிடத்திலத் தான் இந்த நிலத்தை வித்திட்டீங்களே!"

"என்ன விற்றுவிட்டேனா? உனக்கும் ஒன்றும் புரியலையா? வாங்கினதற்கு சாசனம் இருக்குமே எடு பார்ப்போம்."

"பணம் பூராவும் தரன் வாங்கிட்டுச் சாசனத்தை செய்து தருகிறேன்னு சொல்லியிருக்கீங்க; அப்படியிருக்கும்போது என்னங்க சொல்றீங்க..."

"பணம் கொடுத்தே...இல்லேன்னு யார் சொன்னது? கொஞ்சம் கொஞ்சமா கொடுத்தே...கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிக்க. அதுக்குள்ளேயே தேங்காயைப் பறிக்கிறியே!"

"இன்றிலிருந்தே நிலம் உன்னுடையதுதான். நீ இனிச்சீர்திருத்தி பயிர் செய்துகொள். வீட்டையும் கட்டிக்கொள் என்று சொன்னீர்களே! இப்ப ஏங்க சொன்னதை ாத்துறீங்க?"

"எவன்டா சொன்ன சொல்லை காப்பாற்றுறான் இந்த நாளில்......நீ முதலில் வீட்டை காலி பண்ணு...... உன் பணத்தை வேணும்னா வாங்கிக்க..."

"என்னங்க...இப்படி சொல்றீங்க ...இது நல்லா இருக்குதுங்களா...? நான் இதிலத்தாங்க இருக்கணும்".

"அவ்வளவு திமிரா உனக்கு. இப்ப நினைத்தாலும் உன் தலையில் இந்த தேங்காயை தூக்கி வைத்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போய், திருடினாய் என்று சொல்லிச் சிறையில் போட்டுடமாட்டேனா?.... போனால் போகுதுனு பார்த்தா......! நீ உன் சொந்த நிலம் மாதிரிப் பேசுறியே"

"அப்படி ஒன்றும் தவறாக சொல்லலியே?"

"அதெல்லாம் தெரியாது! நீ இன்றைக்கே வீட்டைக் காலி பண்ணிடணும். இல்லையென்றால் ஆளை விட்டுப் பிரித்து அடுக்கிவிடுவேன்." என்று எச்சரித்துவிட்டு போய்விட்டார்.

முருகன் தன் முதலாளியின் மிரட்டலுக்குப் பயந்து வீட்டைக் காலி செய்யாமல் என்ன செய்வான்?

வஞ்சக எண்ணங்கொண்ட பணக்காரர்களால் எத்தனையோ முருகன்கள் நடு வீதியில் நிறுத்தப்படும் நிலை என்றுதான் நாட்டைவிட்டு அகலுமோ?


## திராவிட நாடு பொங்கல் மலர்

## சந்தாதாரர்களுக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூபா 1—50 ஆகும். மலர் பெற விரும்பும் சந்தாதாரர்கள் தங்கள் சந்தா எண்ணையும் குறிப்பிட்டு ரூ. 1—00 முன் பணமாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்

திராவிட நாடு.


(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அறுத்துக்கொண்டு ஒரு முறை வெளியே பறந்துவிட்டால், அதைத் திருப்பிக் கூட்டுக்குள் அடைக்க முடியாது!?— உண்மைதான்! தாகூரின் இக்கருத்து, என் காதல் பாதையிலே நூற்றுக்கு நூறு உண்மை!

பட்டுப் பூச்சியான என் காதலி, என்னிடம் இருந்த வரையில், என்னைச் சுற்றிலும் (எங்களைச் சுற்றிலும்) காதல் எனும் பட்டு உற்பத்தி செய்துகொண்டிருந்தாள். ஆனால், அவள் தன் பந்தத்தை — காதல் உறவை—அறுத்துக் கொண்டு ஒரு முறை வெளியே சென்றுவிட்டாள்! திரும்பவும் அவளை என் வாழ்க்கைக் கூட்டுக்குள் அடைக்க முடியாது!

அவளும் என்னை நாடி இனி வரவே மாட்டாள்! ஏழை என்று எண்ணினாள்! அதனால் துச்சமென என்னை வெறுத்தாள்! இவளுக்காகவே பொருளீட்ட முனைந்ததால், உடல்நிலைகுறைந்த என்னைக்கண்டு பயந்தே போய்விட்டாள்! இந்த நோஞ்சானையா கட்டிக் கொள்வதென்று! ஆம்! உடல் வலிமையிலே நான் நோஞ்சான்தான்! ஆனால், கொண்ட கொள்கையிலே நோஞ்சானல்லவே! அவள் என்னைப் பிரிந்து சென்று விட்டாள்!

அதனால், எனது குடும்ப வாழ்க்கைக் கூடே உடைந்து விட்டது! ஆனாலும், நான் வாழ்கிறேன்! வாழ நினைத்தேன்! வழியும் கிடைத்தது! அதனால், வாழுகிறேன்! எனது பொதுநல வாழ்க்கைக் கூட்டிலிருந்து வாழுகிறேன்!

நாட்டின் எல்லை காக்கும் விடுதலைப் படையிலே சேர்ந்து நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட நான் இன்னமும் வாழ நினைக்கிறேன்! இதிலே எவ்வளவோ மகிழ்வடைகிறேன்! கன்னிப் பெண் ஒருத்தி தரும் மகிழ்வினும் பெரும் மகிழ்வை, நாட்டின் விடுதலைப் படையால் அடைகிறேன்!

இந்த மகிழ்வுதான் எனக்கு உண்மையான மகிழ்வாக மனம் குளிரும் மகிழ்வாக இருக்கிறது!

இத்தகைய மகிழ்வே உலகெங்கினும் பரவட்டும்! இத்தகைய மகிழ்விலேயே நான் என் பொது நல வாழ்க்கைக் கூட்டில் வாழ நினைக்கிறேன்!

O

4-ம் பக்கத் தொடர்ச்சி

உணர்ந்து, தன் கண்ணுளனை வழி படச்சென்ற அவளது சீரிய பண்பு, நம் முன்னோர்கள் போற்றிப் புகழ்ந் தது. முரண்பாடானதல்ல—நிறை காக்கும் பண்பேயாகும்.''

முடிந்தன அறிவுரைகள். தெளிந் தது தாயின் உள்ளம். ஒழிந்தது கண்களின் கலக்கம். தேடிச் சென் றவள் வீடு திரும்பினாள். வேந்தன் நாடிய எண்ணமும் நனிதில் முடிந் தது. கோடிப் பொன் கொடுப் பினும், ஒடிப்பெற முடியாத நல்ல பல அறிவுரைகளை ஈன்ற தன்மை யினால், நீடிய புகழ், வேந்தனை நாடிச் சென்றது.

பார்த்தீர்களா, பாலைபாடிய பெருங் கடுங்கோவின் பான் மையை? அறிவுரைக் கூறும் முறையை. நாடாளும் காவலன் அவன். அவன் ஆணையிட்டால் அவனியே நடுங்கும். ஆணையிட் டானா அவன்? இல்லையே! அறி வுரை அல்லவா கூறத் தொடங்கி னான். அதனால்தான் அவை நம் நெஞ்சைவிட்டு நீங்காமல் நிலைத்து நிற்கின்றன. இலக்கியச் சுவையை அள்ளி வீசுகின்றன. நீங்களும் சுவைத்துப் பாருங்கள். என்றும் உங்கள் மனத்தைவிட்டு நீங்காமல் நிலைத்து நிற்கட்டும். இதோ:

..........................................

'காணேம் அல்லேம்; கண்டனம் கடத்திடை
ஆனெழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறிர்!
[பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவை தாம் என் செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என் செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே] எனவாங்கு;
இறந்த கற்பினட்டு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடஇச் சென்றனள்
அறந்தலைப் பிரியா ஆறும் மற்றதுவே.''

★

# நின் மகன் தாய்

[நா. நாராயணன்]

வையத்திற்கோர் எடுத்துக்காட்டாய் அமைந்தது அவர்கள் வாழ்வு. அவள் வேனிற் காலத்திலே தண் ணியள்; பனிக் காலத்திலோ 'வாங்கு கதிர் தொகுப்பக், கூம்பி வெயிற் பொதிந்த தாமரை' போன்று இளஞ் சூட்டை உள்ளடக்கி இன்பம் தரு பவள்.

அவர்களது, அறத்தோடு இணைந்த அன்பு வாழ்வின் பயனாக ஒரு மகவு பிறக்கிறது.

அதோ, 'குறு குறு நடந்து, சிறு கைநீட்டி, இட்டும் தொட்டும், கவ்வி யும் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்' மலர்ந்த முகத் தோடு வருகிறானே அவன்தான் அவர்கள் புதல்வன்.

ஓர் நாள்!

தாமரையின் இதழ்களை யொத்த பூக்கரங்களையும், பவள வாயினையும், நாவொடு நவிலா இனிய மழலைச் சொற்களையும் உடைய, பொற்றொடி யணிந்த அவ்விள மகன் தெருவிலே சிறு தேர் உருட்டி வருகிறான்.

யாருங் காணாத தனிமை நிலை. தனியனாக நிற்கிறான் சிறுவன். அழ கிய இளம் பெண்ணொருத்தி, அச் சிறுவனை நோக்கி மிக மகிழ்ச்சி யோடு வருகிறாள். தன்னைக் காண் போர் எவருமிலர் என்பதை நிச்சயப் படுத்திக் கொள்கிறாள். உளமிக மகிழ்ந்து சிறுவனை அடைந்து, மிக்க ஆசையோடும் அன்போடும், 'என் உயிரே வருக!' என அணைத்துக் கொள்கிறாள். தாயன்பு அங்கே பிறந்து, சுரந்து, பிரவாகமெடுத்து ஓடுகிறது. பொலங் கலஞ் சுமந்த, பூண் தாங்கின மார்பில் சிக்குண்ட சிறுவனும், அவனை அணைத்து மகிழ்ந்த பெண்ணும் உணர்ச்சி வயப்பட்டு நிற்கின்றனர்.

அவள் வேறு யாரும் அல்லள். தலைவனின் உள்ளங் கவர்ந்த பரத்தை.

இக் காட்சியைக் கண்ட தலைவி விரைந்து வருகிறாள். சக்களத்திப் போராட்டம் நடக்கவேண்டிய இட மல்லவா இது?

தன் உள்ளங் கவர்ந்தவனை உடைமையாக்கியவள் எதிரே நிற் கிறாள். தலைவனின் குளிர் தாங்கு அகலம் அணையப், பெரும் இன்பம் தனக்கு மட்டுமே சொந்தமாக எண்ணியிருந்தவளுக்கு ஏமாற் றத்தை ஏற்படுத்தி, அவ்வின்பத்தில் தானும் பங்குகொண்ட ஏந்திழை எதிர்கொண்டழைக்கிறாள். போர்க் கொடி உயர்த்தச் சரியான சந்தர்ப் பம் தலைவிக்கு.

ஆனால், இது என்ன! மகிழ்ச்சி துள்ள ஓடிவந்து அவளை அணைத்துக் கொள்கிறாளே தலைவி! இன்னும் ஒருபடி மேலே போய், 'இளைய மகளே! ஏன் மயங்கி நிற்கிறாய்? என் தலைவனின் மகனாகிய இவன், அவன் உதிரங் கலந்த உனக்கும் மகனே யல்லவோ? தலைவனின் அன்பைப் பெற்ற நீயும் இவனுக்கு ஒரு தாய் அல்லவா? எனவே ஒளிந்து வந்து காணாமல், உரிமையுடன் உன் மகனை அணைத்துக்கொள்''—என்று அல்லவோ பேசுகிறாள் தலைவி.

இடியை எதிர்பார்த்த அப்பரத்தை மகள் இந்த இனிய ஒலியைக் கேட்டு முகம் கவிழ்ந்து நிற்கிறாள். தலைவி யின் அன்பை எண்ணியெண்ணி நாணுகிறாள். பிடிபட்ட திருடன் போல விழிக்கிறாள். கால் விரலால் நிலம் கீறி, பெண்மை காக்கிறாள்.

தன் காதலனை எப்பொழுதும் உள்ளத்தில் கொண்டிருப்பவளும், அவனை உயிரினும் மேலாய் நேசிப்ப வளும், பெண்மைக்கே இலக்கண மாய்த் திகழ்பவளுமாகிய இவள் தன் மகனுக்குத் தாயாதல் எல்லாவிதத் திலும் சிறப்புடைத்து என எண்ணு கிறாள் தலைவி.

''நின் மகன் தாயான அவளை, யானும் விரும்புவதில் தவறு இல் லையே' என்று கேட்டுத் தலைவனை வியப்பில் ஆழ்த்துகிறாள் அக நானூற்றுத் தலைவி.

''...மாசில் குறுமகள் எவன்பே தூற்றனை
நீயுந் தாயை இவற்கென யான்தன்
கரைய வந்து விரைவனென் கவைஇக்
களவுடம் படுநரில் கவிழ்ப்பது நிலங் கினையா
நபணி நின்றோள் நிலைகண் டியானும்
பேணினென் அல்லனோ மகிழ்ந வானத்
தணங் கருங் கடவு ளன்னோள் நின்
மகன்தா யாதல் புரைவதாங் கெனவே

★

# "பழி"

அந்தப் பெரிய மாடி வீட்டின் முன், படகுபோன்ற புத்தம் புதிய கார் ஒன்று நின்றது. பின்புறமிருந்து இறங்குகிருரே, துல்லிய, மெல்லிய, வெள்ளை வேட்டியும், முழங்காலளவு தொங்கும் ஜிப்பாவும், சட்டம் இல்லாத மூக்குக் கண்ணுடியும் அணிகளாகக் கொண்டு, வாட்ட சாட்டமாக, அவர்தான் 'வான்மதி' பதிப்பக உரிமையாளரும், அந்த மாடி வீட்டின் சொந்தக்காரருமான எழுத்தாளர் 'பல்லவன்' பாராட்டு விழாக் குழுவின் தலைவரும் ஆன சபாபதி முதலியார்.

உள்ளே, 'பல்லவன்' அவர்களின் அறைக்குள் நுழைந்தார், சபாபதி முதலியார் அவர்கள் — பாராட்டு விழாவின் விருந்துக்கும், கூட்டத்திற்கும், எழுத்தாளரை அழைத்துச் செல்ல. அங்கே......? மேசைமீது ஒரு காகிதக் கட்டு, படபடவெனக் காற்றில் அடித்துக்கொண்டிருந்தது. அதன் தலைமீது ஒரு, கண்ணுடி பளு வைக்கப்பட்டிருந்தது.

மற்ற, எந்தவிதமான ஆளரவமும் இல்லை. வீட்டு வேலைக்காரனை அழைத்த முதலியார்,

'ஐயா எங்கே?'—என்ருர்.

'தெரியாதுங்க. நீங்க வந்தால்' அந்தக் காகிதக் கட்டைப் படிக்கச் சொன்ஞர்'— என்ருன் அவன்.

வேக வேகமாக, அந்தக் காகிதக் கட்டைப் பிரித்தார். அதில்:

தமிழகமே!

உன்னை உயர்த்த முயன்ற எழுத்துச் சிற்பிகளில் ஒருவன் அழைக்கிறேன்! கேட்கிறதா உன் காதுகளில்? கேட்காது இப்போது. வெளி வேடம் போட்டு, ஊரை ஏமாற்றும் எத்தர்களைக் கண்டு, ஏற்றிப் போற்றி வாழும், போலி வாழ்க்கைக்கு உன்னை, நீயே ஏமாற்றிக் கொண்ட பிறகு, என்னைப் போன்ற, உண்மையானவன் அறைகூவல் விடுவது தெரியாதுதான்!

உன்னை நானும் ஏமாற்றிப் பழி வாங்கிக் கொண்டிருக்கிறேன். ஆமாம்! ஏழ்மையின் மடியில் தாலாட்டப்பட்ட நான், உயர்ந்த இலட்சிய வாழ்க்கை வாழ விழைந்தேன். பழம் பெரும் தமிழிலக்கியங்கள், என் மனதிற்கு உறுதி அளித்தன. தமிழுக்குத் தலை வணங்கிய மன்னர்களைக் கண்டேன். ஔவைக்கு அமுதளித்த பாரி கண்டேன். பாவலனுக்குக், காவலன் கவரி வீசியதைக் கண்டேன்.

## குழலோன்

மானத்தை மறந்தவர்க்கு, தன் உயிரை ஈந்த மன்னனின், வீர உரை படித்தேன். எழுத்தின் திறம், நேர்மையான வாழ்க்கைக்கு, வழிகாட்டும் என எண்ணினேன். ஏமாந்தேன்! ஆனல், என் மனம், 'பழி! பழி!!' என்று போர்ப்பறை கொட்டியது. வெற்றி பெற்றேன். பழி வாங்கிப் பெற்ற வெற்றியைக் கொண்டாட, முதலியார் ஒரு, பாராட்டு விழா நடத்துகிருராம். நீ, என்னை எழுத்துலகில் வஞ்சித்தாய்! ஆனல் இவர், என் காதல் வாழ்க்கை என்ற உலகில் ஏமாற்றிவிட்டார்: அவரையும் நான் பழி வாங்கிக் கொண்டேன். உன்னைப் பழி வாங்கினல் என் மனதிற்கு ஆறுதலே தவிர, உன்னைப் பொறுத்த வரை, எந்த நட்டமும் இல்லை! ஆனல், முதலியாரை, நான் பழி வாங்கியிருப்பது, அவரைப் போன்ற, நம்பிக் கைத் துரோகிகளுக்கு—வெளி வேடம் போடுபவர்களுக்கு ஒரு நல்ல அறிவுரை! பாடம்!!

உயர்ந்த குறிக்கோளை, மனம் விரும்பும் காதல் வாழ்க்கையை, பல நல்லவர்களின், அறிவுரைகளின் கட்டுக்கோப்புடன், எல்லையுடன் ஆராய்ந்து எழுதிய என் சிறுகதைகள் தோல்வியை அடைந்தன! மனம் வேதனைத் தீயில் வெந்தது. இவ்வகையான நல்லவைகளை அறிந்து, ஆராயும் மனம் எவருக்கும் வரவில்லையா? என என்னை நானே கேட்டுக்கொண்டேன். பதில்...? அதுதான் புரியவில்லை. என்னுடைய வாழ்க்கைத் தத்துவங்கள், மனம் வளராத மக்களிடம், வரம் கேட்டு நின்றது! ஆனல், அதற்காக மனம் இரங்கியவர்கள் யார்? எவருமில்லை.

ஓயாமல் சிந்தித்தேன்! திடீரென்று விடை கிடைத்தது.

ஆம்! வரண்டுபோன வாழ்க்கைத் தத்துவங்களை விரும்பவில்லை இன்றைய மக்கள்—குறிப்பாக இளைஞர் சமுதாயம்! வற்ருது சுரக்கும், கீழ்தர உணர்ச்சிகளைத் தூண்டும், கதைகளைத்தான் விரும்பியது. 'கலித்தொகை,' 'கலிங்கத்துப்பரணி' விரும்பவில்லை மக்கள்! 'கொக்கோகம்', 'ஆண் பெண் இன்பம்' போன்றவைகளை விரும்பியது. ஆம்!

தாமரைக் குளத்தை விரும்பவில்லை? சேறு படிந்து, பாசி கலங்கியக் குட்டை நீரை விரும்பினர்கள்! சந்தன மணம் ஏற்கவில்லை அவர்கள்! சாக்கடை நாற்றத்தை விரும்பினர்கள். மலர்ந்த மல்லிகை சூட

முயலவில்லை அவர்கள்! பஞ்சும் காகிதமும், வண்ணத்தால் நிறம் பெற்ற செயற்கைப் பூ அவர்களை வசீகரித்தது. ஏ, பேதை மனங்களே! உங்களுக்காக வருத்தப்பட்டேன்! வேதனைப்பட்டேன்! அத்துடன், உங்களைத் திருத்த முயன்றேன். பழம்பெரும் இலக்கியங்களை உங்கள் முன் கொண்டுவந்து வைத்தேன்! கன்னல் சுவை வைத்தேன் எதிரில்! கன்னியின் சுவை யில்லை என்று, வீசியெறிந்தீர்கள்! என் வீர மனம், வீறுகொண்டது.

நல்லதை மதியாத மக்களைப் பழிக்குப்பழி வாங்க எண்ணினேன். நஞ்சுக்கு, நஞ்சு முறிவு என்பார்கள்! ஆகவே, நஞ்சை ஊட்ட நானும் துவங்கினேன்.

இரசாயன ஆராய்ச்சியில், நல் முறையில், ஆராய்ச்சி செய்தால், எதிர்பார்த்த பலன் கிட்டுகிறது. சிறிது தவறினாலும், எதிர்பார்த்தப் பலனுக்கு நேர் எதிரான விளைவை உண்டாக்குகிறது. அதைப்போன்றதே மனம். திருத்த முயன்றேன்... அதனால் எனக்கும் தோல்வி, என் இலட்சியத்திற்கும் தோல்வி, நல்ல பல கருத்துக்களுக்கும் தோல்வி! ஏன்? உங்களுக்கே தோல்விதானே? ஆகவே, பழிவாங்க எண்ணிய நான், அருவருக்கத் தகுந்த கதைகளை, எழுத ஆரம்பித்தேன். என் கதைகளில், மனோதத்துவத்தைப் பின்னணியாகக் கொண்டு, மன உணர்ச்சிகளுக்கு இடம்கொடுத்து, ஆபாசத்தின் எல்லைக்கே போனேன்! உலகம் என்னை ஒரு எழுத்தாளனாக மதித்தது. மாடி வீடு கொடுத்து, மரியாதை கொடுத்து, சமுகத்தில், மதிக்கப்படும் உயிர்களில் ஒருவனாக்கியது. நீதி கூறியபோது ஒருவேளை உணவு உண்டேன்! கிடைத்தது அப்போது அவ்வளவே! இப்போதும் ஒருவேளைதான் உண்கிறேன். ஏன்? முன்போல் கிடைப்பது அவ்வளவா? இல்லை! அதிகம் உண்டால், செரிப்பதில்லை! காலம், இரவையும், பகலையும் மாற்றி மாற்றித்தான் உணர்த்துகிறது! ஆனால், அனுபவிப்பவர்களின் உணர்வில் மாறுபாடில்லையா? சிறுவன் மனதில் ஒரு எழுச்சி! காதலர் உள்ளங்களில், ஏக்கம்! துரோகிகளின், கொலைகாரர்களின், திருடர்களின் மனதில், மாறி மாறி எழும், தீரமும், திகிலும். இப்படிப் பலப்பல!

அதேபோன்று, வெறிகொண்ட என் வாழ்க்கையில், வேல்விழியாள் ஒருவள் குறுக்கிட்டாள். ஆம்! அவளும் என் முன்னைய கதைகளைப் படித்து, என்னை நினைத்து, இன்றைய கதைகளில் என்னைக்கண்டு, உடல் வாழ்க்கை வாழவிரும்பினாள். எழுத்தாளன், ஒரு விஞ்ஞானியைப் போன்றவன், விஞ்ஞானி, சாக்கடைப் புழுவை மதித்து, எடுத்து ஆராய்வான்! ஆனால், அவனில் ஒன்றாய் இணைந்த மனைவியையோ, மக்களையோ நினைக்க நேரமிருப்பதில்லை! அதேபோல், சமுதாயத்தின் சாக்கடைப் பூச்சிகளிலிருந்து, மலர்ந்து மணம்வீசும் மலர்வரை எடுத்து ஆராயும் எழுத்தாளனும், தன்னைப்பற்றியோ, தன்னைச் சார்ந்தவர்களைப்பற்றியோ நினைக்க நேரமிருப்பதில்லை. அப்படிநினைத்தாலும் அவன் எழுத்து உணர்ச்சியுள்ளதாக இருக்குமா? என்பது ஐயத்திற்குரியதே!

அதேபோன்ற நிலையில்தான் இருந்தேன் நான்! ஆனால், அவளின் அன்னநடையும், மின்னல் ஒளியின் பயங்கரத்தைப்போன்றகண்ணொளியும், என்னை ஆட்கொண்டது படிப்படியாக; 'எறும்பூரக் கல்லும் தேயாதோ?' யாழின் நரம்புகளில், விரல்களின் உணர்வுபடப்பட, நாதம் எழத்தானே செய்யும். ஆனால், நாதத்தின் இனிமை, உணர்ச்சியின் நிலையைப் பொருத்து உணரமுடிகிறது.

சேற்றில், செந்தாமரை முளைத்தது. ஆம்! ஆபாச உணர்ச்சிகளுக்கு நிலைக்களனான, என் பழி வாங்கும் மனத்திலும், காதல் துளிர் விட்டது.

அப்போது ஒரு நாள், நான், வட நாட்டுப் பயணம் துவங்கினேன். என்உளம் கவர்ந்தவளிடம், 'மூன்று மாதங்கள் பொறுத்துக்கொள்' பயணம் முடித்தவுடன் வந்து உன்னை என்னுடையவளாக ஆக்கிக்கொள்கிறேன்' என்று கூறி விடைகேட்டேன். அளித்தாள். முதலியார் அவர்களிடம், 'ஐயா! (ஆம்! அன்று அவர் என் ஐயாதான்! ஆபாசங்களின் தலைவனாக, என்னை, வெளியுலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமை, 'வான்மதி'க்கும் அதன் உரிமையாளரான முதலியாருக்குமே சாரும்) நான் திரும்பிவரும் வரை, அவளின் தேவைகளை கவனித்துக்கொள்ளவேண்டியது தாங்கள்தான். எனக்கு அளித்த வாழ்க்கையின் உயிரே, அவளிடம்தான் அடைக்கலம் புகுந்திருக்கிறது. ஆகவே, எனக்கு இந்த உதவிசெய்வீர்கள் என்ற, உறுதியான நம்பிக்கையுடன் செல்கிறேன்!'— என்றேன்.

நம்பிக்கையுடன் சென்றேன். அஜந்தா, 'எல்லோரா', தாஜ்மகால் எங்கும்அவளையும், அவள் நீலமலர்க் கண்களையும் நினைவுபடுத்தியது! மூன்று மாதங்களை, மூன்று யுகங்களாகக் கழித்துவிட்டு வந்தேன்! 'ஏன் வந்தோம்?' என்றாகிவிட்டது. எல்லோராவில் கண்ட கல்லுருவப் பெண்கள், அஜந்தாவில் கண்ட, வண்ணக் கலவையின் பெண்ணுருவங்கள், காதல் சமாதியான தாஜ்மகாலின் அழகு, அங்கே, என் பயங்கர முடிவுக்கு முன்னறிவிப்புக் கொடுத்தது, இங்கு வந்தபிறகுதான் அறிந்தேன்!

ஆம்! என்னவள், முதலியாரின் மனைவி! என் கதையுலகத் தலைவரின் மனைவி — எனக்குத் தலைவி! ஆம்! ஏமாற்றப்பட்டேன் நான். நம்பிக்கைத் துரோகி ஒருவனின் ஆசை வார்த்தைகளை நம்பி, மனதால் வாழ நினைத்த என்னை, உடலால் வாழ நினைத்த அவள், மன உணர்ச்சிக்கு மதிப்பளித்து வாழ எண்ணிய என்னை, உடல் உணர்ச்சிக்குப் பலியான அவள் ஏமாற்றிவிட்டாள். முழங்காலில் பட்ட புண்ணை வேட்டியால் மறைத்துக்கொள்வதுபோல், மனதில்பட்டகாயத்தை,உதட்டளவுப் புன்னகையால் மறைத்துக்கொண்டேன். ஆயிரம் ஆயிரம் பொய்கள் கூறி என்னைச் சமாதானம் செய்ய முயன்றார் — இல்லை! நிலைமையைச் சமாளிக்க முயன்றார். மீண்டும் பழி வாங்கும் உணர்ச்சி, என் உள்ளத்தில் தலைவிரித்தாடியது. காலம் கனியட்டும் என்று காத்திருந்தேன்.

காலம் கனிந்தது. கதைகளின் மூலம், என் பழிவாங்கும் எண்ணத்தின் அடிக்கல், அவள் மனதில் நாட்டப்பட்டது. ஆம்! எறும்பும் ஊர்ந்தது. கல்லும் தேய்ந்தது.

நாளை, எனக்கு பாராட்டு விழா! என் மனதில் பெருந் தன்மையான எண்ணம் முளைவிடவேண்டும்! பழைய துயரஎண்ணங்கள் வேரோடு கல்லி எறியப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன், முதலியார் செய்த ஏற்பாடு! என் உயர்வைவிடஅவரின் சுயநலம் மிகுந்திருந்தது.

ஆனால், இன்றிரவு வெகு தொலைவு போகப் போகிறேன். ஆம்! கண் காணாத இடத்தில் மறையப் போகி

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

றேன். என் பழிவாங்கும் எண்ணம் ஈடேற, முதலியார், முகத்தில் கரி பூச, பாராட்டு விழாவில் நான் கலந்துகொள்ளப் போவதில்லை. அத்தோடு, என் பழிவாங்கும் பயங்கர எண்ணத்திற்குத் தண்டனையாக, தனிமை என்ற பயங்கர நிலை பெறப் போகிறேன்.

அதேபோது, என்னை வஞ்சித்த, அந்த சபல மனம் படைத்தவள், வேறொருவனுடன்—தன் கணவனைப் பிரிந்து, ஓடப் போகிருள் என அறிந்தேன். என் பழி வாங்கும் படலம் அத்துடன் முடிவு பெறுகிறது. வெற்றியா தோல்வியா? முடிவு உங்கள் மனதில் தெரியட்டும்.

ஆனுல் ஒரே குறை! 'நானை, முதலியார் தலையில் கைவைத்து உட்கார்ந்து அழும் அழகைக் காண நேரில் இல்லையே!' என்ற குறை தான் அது.

வருகிறேன்! உங்கள் மனதிலிருந்து இனி இந்தப் பேதை எழுத்தாளன் மறையட்டும்.

✱

உலகைப் பல வழிகளில் ஏமாற்றிய, முதலியாருக்கு இது ஒரு ஏமாற்றமாகத் தெரியவில்லை. முல்லைக் கும்பலில், இரண்டு சிதறி சேற்றில் விழுந்தால், அந்த இரண்டிற்காக யாராவது வருந்துவார்களா?

சில மாதங்களில் வந்த விளம்பரம்! "தேன் சுவைக் கதை—"பழி!" எழுத்தாளர் 'பல்லவனின்' மற்றுமொரு சுவை விருந்து! ஐந்தாம் பதிப்புத் தயாராகிறது. இன்றே பிரதிக்கான தொகையுடன் முந்துங்கள்."

விபரங்களுக்கு:

'வான்மதி' பதிப்பகம்

சென்னை—8.

ஆம்! எழுத்தாளர் பல்லவன் கடிதமும், புத்தகமாகியது—சிற்சில பெயர் மாற்றங்களுடன்!

★

"திராவிட நாடு"

# பொங்கல் மலர்

இன்றைய நாட்டின் நிலையை விளக்கும்

அரிய கருத்தோவியங்களுடனும்

போர் குறித்த பல திறப்பட்ட

ஆராய்ச்சிக் கட்டுரைகளுடனும்

சி. என் ஏ.

தீட்டும் சிந்தனையைக்கிளறும்

இனிய கருத்துக் கருவூலங்களைப்

படித்தின்புறுங்கள்.

விலை ரூபா 1-50.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்